**பேருவளை நகர சபை**

**களுத்துறை மாவட்டம்**

**-------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 16 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருவாய் ரூபா 1,706,135 ஆகியபோதும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 838,308 ஆக அதனைக் காட்டியமையால் நிலையான வைப்பு வட்டி வருவாய் ரூபா 867,827 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கின் மீதியாகிய ரூபா 232,055 நிலையான வைப்பு மீதியிலும் காசு மீதியிலும் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 232,055 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) நூலகப் புத்தகங்கள் தொலைந்து போனமை தொடர்பாக ஊழியர்களது சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 27,683 நூலகப் புத்தகக் கணக்கில் செலவு வைக்கப்படவேண்டுமாயினும், விடுமுறை தினச் சம்பளக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) தளபாடங்களும் பொருத்திகளுக்குமான பட்டோலையில் உள்ள ரூபா 155,710 பெறுமதியான விளையாட்டுத்துறை உபகரணங்கள் சபையில் இருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 6,490,999 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 42,076,220 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 28,402,723 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேறுகளில் ரூபா 13,673,497 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 13,673,497 அதிகரிப்பும் செலவில் ரூபா 5,602,930 அதிகரிப்பும் நிதிப்பெறுபேற்றின் ரூபா 13,673,497 அதிகரிப்பிற்கான பிரதான காரணிகளாகும்.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை**

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 16,692 | 10,383 | 17,960 |
| (ii) | குத்தகை வாடகை | 23,333 | 22,438 | 895 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 130 | 122 | 80 |
| (iv) | ஏனைய வருவாய் | 127 | 125 | 02 |

## 2.2.2 தீர்வை வரி

(அ) 2016 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 23,673,517 தீர்வை வரி நிலுவை மீதியில் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 12,022,611 அல்லது 51 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கெனப் பட்டியலிடப்பட்ட ரூபா 15,267,162 இல் 59 சதவீதமான ரூபா 9,013,326 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த நிலுவை மீதியாகிய ரூபா 18,643,991 இல் 2065 கூறுகளிலிருந்து 3 முதல் 5 ஆண்டுகளாக ரூபா 7,237,365 , 1083 கூறுகளிலிருந்து 5 முதல் 10 ஆண்டுகளாக ரூபா 3,129,374,395 கூறுகளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,384,022 என்பன உள்ளடங்கியிருந்தன. மேலும், 06 கூறுகளில் ரூபா 50,000 க்கு மேற்பட்ட ரூபா 448,551 நிலுவையாகவும் 11 கூறுகளில் ரூபா 30,000 முதல் ரூபா 50,000 வரையிலான ரூபா 503,044 நிலுவையாகவும் மேற்படி நிலுவை மீதியில் உள்ளடங்கியிருந்தன.

(ஈ) 2014 முதல் 2016 ஒக்தோபர் 31 வரை பெறப்பட்ட 163 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட இசைவுச் சான்றிதழ்களைப் பெற்றிராத 155 கட்டிடங்களைப் பரிசிலித்து, இசைவுச் சான்றிதழ்களை வழங்கி, புதிய மதிப்பீட்டைச் செய்து, தீர்வை வரியைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.3 அறிவித்தல் பலகை வருவாய்

2016 நவெம்பர் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின் பிரகாரம் 12 அறிவித்தல் பலகைகள் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 79,012 அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 63,720 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 10,000,000 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) 2008 சனவரி 28 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய 11 நிறுவனங்களுக்கு அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட வீதிகளைப் பல்வேறு காரணங்களின் நிமித்தம் பழுதுபார்க்கும்போது குறித்தவர்களிடமிருந்து வைப்புப் பணம் பெறப்பட்டிருந்தபோதும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி மீண்டும் அவ்வீதிகள் செப்பனிடப்படவில்லை.

மேலும், சபையானது 2016 செப்டம்பர் மாதம் வரை வீதிகள் பழுதுகாப்பட்டதன் பொருட்டு ரூபா 516,771 ஐப் பெற்றிருந்ததுடன், அத் தொகையானது பொது வைப்புக் கணக்கிலிடப்படாது சபையின் வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான காணிகளது நிர்வாகம்

---

(i) நகர சபையின் பதிவேடுகளில் காணப்படும் 17 காணிகளுக்கான உரித்துறுதிகள் இருக்கவில்லை.

(ii) தொழில் பிரிவால் பராமரிக்கப்படும் காணிகள் தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்கப்படாததும் கணக்கீட்டுப் பகுதியின் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடங்கியதுமான 4 காணிகள் இருந்தன.

(iii) கணக்கீட்டுப் பிரிவின் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடங்காததும் தொழில் பிரிவின் காணிப் பதிவேட்டில் உள்ளடங்கியதுமான 4 காணிகள் இருந்தன.

(iv) காலி வீதி ஸ்ரீ விஜய சிற்றுண்டிச் சாலையின் பின்புறத்தே வாளிக் கழிவறை அமைந்துள்ள காணி சம்பந்தமாக சில பிரதேச வாசிகள் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இக்காணிக்குரிய உரித்துறுதி நகர சபை வசம் இருக்கவில்லை. இதற்கமைய, இவ்வழக்கின் தீர்ப்பு நகர சபைக்குப் பாதகமாக அமையக்கூடும் என அவதானிக்கப்பட்டது.

(v) மாடுகளை இறைச்சிக்காகத் தயார் படுத்தும் பழைய காணியைப் பிரதேச வாசிகள் கைப்பற்றியிருந்தபோதும், உரித்துறுதி இன்மையால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(vi) கொச்சிமலை பள்ளிவாசலுக்கு அருகே உள்ள காணியின் ஒரு பகுதியைப் பிரதேச வாசிகள் கைப்பற்றியிருந்தனர். அதற்கான நில அளவைப் பத்திரம் நகர சபையிடம் இருந்தபோதும், உரித்துறுதி இருக்கவில்லை.

**3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

(அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு கிரமமான விதிமுறைகளைச் சபை கடைப்பிடிக்கவில்லை.

(ஆ) சபையால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு 2013 செப்டம்பரில் ரூபா 2,500,000 பெறுமதியான காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக் காணிக்கான போக்குவரத்து வசதியின்மையால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை சபையின் காணிக்கருகே உள்ள தனியார் காணியொன்றில் வைக்கப்பட்டு அங்கு அவை துகள்களாக்கப்பட்டிருந்தன.

(இ) தற்போது கழிவுப் பொருட்கள் இடப்படும் காணிக்கு அண்மையில் அத்துமீறியவாறு அமைக்கப்பட்ட பெருமளவிலான வீடுகள் உள்ளதுள்ளதுடன், அத்துமீறிய இந்நிர்மாண வேலை தொடர்பாகச் சபை முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

### 3.4 செயலாற்றல்

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் நிலையான வைப்பு முதலீடுகள் ரூபா 44,284,818 ஆகும். நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 31,330,356 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது வேலைகளுக்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூபா 16,342,278 மாத்திரமே. இதற்கமைய, முதலீட்டுப் பெறுமதியில் 22 சதவீதம் மாத்திரமே அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) பாதீடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்